செ.வெ.எண்: 15. நாள்:06.07.2019

**கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் ஜல்சக்தி அபியான் (JAL SHAKTHI ABHIYAN )- நீர் மேலாண்மை திட்டப்பிரிவு கண்காணிப்பு அறையை - மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் சு.பிரபாகர் இ.ஆ,ப. அவர்கள் இன்று ( 06.07.2019) திறந்து வைத்து பார்வையிட்டார்.**

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நீர் மேலாண்மை இயக்கம் (ஜல் சக்தி அபியான்) குறித்து 08.07.2019 முதல் 10.07.2019 வரை மூன்று நாட்களுக்கு மத்திய அரசின் கூடுதல் செயலாளர், இயக்குநர்கள், பொறியியல் வல்லுநர்கள், விஞ்ஞானிகள் அடங்கிய குழு நேரில் ஆய்வு மேற்கொள்ளவுள்ளார்கள். இது குறித்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஜல் சக்தி அபியான் - நீர் மேலாண்மை திட்டப்பிரிவு கண்காணிப்பு அறையை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் சு.பிரபாகர் இ.ஆ.ப. அவர்கள் இன்று ( 06.07.2019 ) திறந்து வைத்தார்.

இதில், நீர் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பாக கிருஷ்ணகிரியில் உள்ள 30 பிர்காவில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட பணிகள், தற்போது தேவைப்படும் பணிகள் குறித்தும், கிராமங்களில் உள்ள கட்டிடங்களில் மழை நீர் சேகரிப்பு தனிநபர் இல்லம், பொது இடங்களில் மழைநீர் சேகரிப்பு தொட்டிகள் கட்டுதல், நீர் ஆதாரமின்றி வறண்டுவிட்ட ஆழ்துளை கிணறுகளில் மழைநீர் மூலம் புதுப்பிக்கும் பணிகள், மரக்கன்றுகள் அதிக அளவில் நடுதல், பழமையான ஏரி, குளங்களை புதுப்பித்தல், கோவில் குளங்கள், தெப்பக்குளங்கள் புனரமைத்தல் போன்றவற்றின் கீழ் அடுத்த இரண்டு மாதத்திற்கு மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்தும், மேலும் விவசாயிகள் தங்களது நிலங்களில் பண்ணைக் குட்டை அமைக்க வேளாண்மைத்துறை, ஊரக வளர்ச்சித்துறை, வருவாய்த்துறை, தோட்டக்கலைத்துறை மற்றும் பொதுபணித்துறை ஆகிய துறைகள் சார்பாக நீர் மேலாண்மை திட்ட பணிகள் குறித்து மேற்கொள்ளப்படவுள்ள பணிகளை கண்காணிக்கும் பொருட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் - ஜல் சக்தி அபியான் - நீர் மேலாண்மை திட்டப்பிரிவு கண்காணிப்பு அறை திறந்து வைக்கப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் ஊரக வளர்ச்சித்துறை திட்ட அலுவலர் திருமதி. ஜி.கே.லோகேஸ்வரி, ஊரக வளர்ச்சித்துறை செயற்பொறியாளர் திரு.எஸ்.ஆறுமுகம், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திரு.ஹரிகரன், உதவி இயக்குநர் (தணிக்கை) திரு.பழனிச்சாமி, உதவி திட்ட அலுவலர் திரு. ஜாகீர்உசேன், செய்தி மக்கள்தொடர்பு அலுவலர் திரு.மு.சேகர், ஊரக வளர்ச்சித் துறை அலுவலக கண்காணிப்பாளர்கள் திரு. சுந்தரபாஸ்கர், திரு.ரங்கராஜன், திருமதி.சாந்தி, திருமதி.உமாமகேஸ்வரி, மற்றும் துறை அலுவலர்கள் உடன் இருந்தனர்.

**செய்தி வெளியீடு: மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**கிருஷ்ணகிரி**